மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திருமதி. C. கலைவாணி, B.A., L.L.B.,**

மாவட்ட உரிமையியல் நீதி பதி .

2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை -

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் ஆவணித்திங்கள் 08 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 26/2020 -ல்**

**அசல் வழக்கு எண். 157/2018**

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, நெடுவாக்கோட்டை வட்டம், இலக்கணாம்பேட்டை மெயின்ரோடு கதவு எண்.9/155-ல் வசிக்கும் ராஜாங்கம் குமாரர், இந்து, சிவமதம், 30 வயதுள்ள ஆர்.கோபிநாத்
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, நெடுவாக்கோட்டை வட்டம், இலக்கணாம்பேட்டை மெயின்ரோடு கதவு எண்.9/155-ல் வசிக்கும் ராஜாங்கம் குமாரர், இந்து, சிவமதம், 29 வயதுள்ள ஆர். சதீஷ்குமார்

அவர்களது பொது அதிகார முகவர் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, நெடுவாக்கோட்டை வட்டம், இலக்கணாம்பேட்டை கிராமம், மெயின்ரோடு, இலக்கம் 9/155?ல் வசிக்கும் ராஜாங்கம் மனைவி, இந்து, சிவமதம், வீட்டுக்குடித்தனம் 55 வயதுள்ள புஷ்பவள்ளி .... மனுதாரர்கள்/வாதிகள்

**// எதிர்//**

சிங்கப்பூர் - 090025, APT Block 25#, 1281 TELOK BLANGAH CRESENT, NRTC No.8.7521925C என்ற முகவரியில் வசிக்கும் துரை அவர்கள் குமாரர் இந்து, சிவமதம், 60 வயதுள்ள ராஜசேகர் அவரது பொது அதிகார முகவர் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி நகரம், கமால் நகர், இலக்கம் 19 என்ற முகவரியில் வசிக்கும் கோவிந்தசாமி குமாரர், இந்து, சிவமதம், 70 வயதுள்ள ஜி.துரை. ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது, அசல் வழக்கு "ஏ" மற்றும் "பி" ஷெட்யூல் சொத்துக்களை அளவீடு செய்ய சமூகம் நீதிமன்றத்தில் தொழில் புரியும் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து இரு தரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய் துறை ஆவணங்கள் அடிப்படையிலும், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளந்து கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடக்கோரி சிபிசி கட்டளை 26 விதி 9-ன் படி தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

இம்மனு தாக்கல் ஆன நாள் :- 07.11.2019

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :- 16.03.2020

இம்மனு 11.08.20121-ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. R.S. ஜெயசங்கர், திரு. V. K. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S. விஜயன், திரு. K. சிவசுந்தர், திரு. K. கண்ணதாசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று(24.08.2021) இந்நீதிமன்றம் வழங்கும்.....

## தீர்ப்பாணை உத்தரவு

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. நீதிமன்ற ஆணையராக திரு. P.ராதா அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

03. நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ. 5,000/- நிர்ணயிக்கப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் இரு தரப்பு வழக்கறிஞர்களுக்கும் முறையாக அறிவிப்பு கொடுத்து, இருதரப்பு பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலும் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் அளவீடு செய்து 2 மாத காலத்திற்குள் அறிக்கை மற்றும் வரைபடத்தினை தாக்கல் செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

04. மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்குரிய ஊதியம் ரூ. 5,000/-த்தை வரும்13.09.2021 ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

05. இம்மனுவினை மீண்டும் அழைக்க 14.09.2021

2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(S/d. C. Kalaivani).,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

## சொத்து விபரம்

நாகப்பட்டிணம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி வட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த அசேஷம் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட 20, கோபிரளயம் வருவாய் கிராமத்தில் பட்டா எண்.107, 234-ல் உள்ள

1. புல எண்.196-3C புஞ்சை பூரா ஏர்ஸ்0.13.5-ல் பகுதி ஏர்ஸ் 0.07.0 க்கு செண்ட் 17 க்கு சதுரடி 7412-க்கு சதுர மீட்டர் 688.59(இதற்கு பழைய புல எண்.196-3)

**நான்கெல்லை** : ராஜசேகர் புஞ்சைக்கு வடக்கு மற்றும் கிழக்கு, மேற்கு கண்ணிக்கும் தெற்கு இதற்குட்பட்டது.

2. புல எண்.196-11 புஞ்சை மனை பூரா ஏர்ஸ் 0.06.5-ல் செண்ட் 15 க்கு சதுரடி 6540 க்கு சதுர மீட்டர் 607.58(இதற்கு பழைய புல எண்.196-2A) இதில் புதிதாக கட்டப்பபடுள்ள மங்களூர் ஓடு வேய்ந்த வீடு அகலம் 10 அடி நீளம் 17 அடிக்கு கூடுதல் 170-க்கு சதுர மீட்டர் 15.79. மேற்படி வீட்டின் கதவு எண்.9/133-1

**நான்கெல்லை** : கண்ணிக்கு வடக்கு, ரோட்டிற்கு தெற்கு, ராஜசேகர் மனைக்கும் கிழக்கு, மேற்கு இதற்குட்பட்டது.

ஆக கூடுதல் இனம் 2-க்கு கூடுதல் செண்ட் 0.32 க்கு 13952 சதுரடிக்கு 1296.17 சதுர மீட்டர்.

## B -Schedule

நாகப்பட்டிணம் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி வட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த அசேஷம் பஞ்சாயத்து எல்லைக்குட்பட்ட 20, கோபிரளயம் வருவாய் கிராமத்தில்

புல எண்.196-6 மற்றும் 196-10-ல் கிழக்கு பக்கம் தென்வடல் 4 மீட்டர் அகலம் மேற்கு பக்கம் தென்வடல் 4 மீட்டர் அகலம், வடக்கில் 37 மீட்டர் நீளம் தெற்கில் 37 மீட்டர் நீளம் கொண்ட பொது பாதை.

நான்கெல்லை : ரோட்டிற்கு மேற்கு, வாதிகள் மற்றும் ராஜசேகர் சொத்திற்கு வடக்கு, ராஜசேகர் சொத்திற்கு கிழக்கு, தெற்கு இதற்குட்பட்டது.

(S/d. C. Kalaivani).,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.